# சம்மனசுக்களின் இராக்கினியான புனித மரியாவுக்கு மன்றாட்டு மாலை

**முன்மொழிப் பாடல்:**

உமது தலைமையின் கீழ், புனித பிரான்சிசுக்கு மிகவும் பிரியமான எங்கள் சம்மனசுக்களின் இராக்கினியே, நாங்கள் உம்மை வாழ்த்திப் போற்றுகிறோம்! எங்கள் வாழ்வும் சம்மனசுக்களைப் போல மாற உமது உதவியை நாடுகிறோம். நாங்கள் ஒருபோதும் உம்மை வேதனைக்குள்ளாக்க மாட்டோம். ஆமென்.

முத : ஆண்டவருடைய தூதர் மரியாவுக்குத் தூதுரைத்தார்.
எல் : அவரும் தூய ஆவியாரால் கருவுற்றார்.

**மன்றாட்டு மாலை:**

முத : ஆண்டவரே இரக்கமாயிரும்!
எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்!
முத : கிறிஸ்துவே இரக்கமாயிரும்!
எல் : கிறிஸ்துவே இரக்கமாயிரும்!
முத : ஆண்டவரே இரக்கமாயிரும்!
எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்!
முத : கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
எல் : கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்.

முத : விண்ணகத்தில் இருக்கும் தந்தையாகிய இறைவா...
எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்!
முத : உலகத்தை மீட்ட மகனாகிய இறைவா...
எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்!
முத : தூய ஆவியாராகிய இறைவா...
எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்!
முத : மூவொரு கடவுளாய் இருக்கிற ஒரே இறைவா...
எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்!

**(கீழுள்ள புகழுக்குப் பதிலுரையாக 'எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்' என்று சொல்லவும்)**

முத : இறைவனின் தாயானப் புனித மரியாவே…

முத : சம்மனசுக்களின் இராக்கினியானப் புனித மரியாவே…

முத : தந்தையாகிய இறைவன் தம் தூதரை அனுப்பப் பெற்ற புனித மரியாவே…

முத : கபிரியேல் சம்மனசானவரின் வாழ்த்துரையைப் பெற்றப் புனித மரியாவே…

முத : இறைவனின் தாயாகச் சம்மதம் தெரிவித்தப் புனித மரியாவே…

முத : இறைவனின் மக்களைப் பாதுகாக்கும் மைக்கேல் சம்மனசானவரின் புனித மரியாவே…

முத : இறைப்பயணங்களில் எங்களைப் பாதுகாப்பாக வழிநடத்தும் இரஃபேல் சம்மனசானவரின் புனித மரியாவே…

முத : எங்களது பாதுகாவலர்களாகப் பணியாற்றும் சம்மனசுக்களின் இராக்கினியே…

முத : நாசரேத்து வீட்டை லோரெட்டோ நகருக்குத் தூக்கிச் சென்ற சம்மனசுக்களின் இராக்கினியே…

முத : உமது திருவுருவத்தை ஜெனசானோவுக்குத் தூக்கிச் சென்ற சம்மனசுக்களின் இராக்கினியே…

முத : புனித பெனடிக்டின் பரிசும், பிரான்சிஸ்கன் சபையினரின் பிறப்பிடமுமான போர்டியுங்குலாவின் ஆலயத்தின் புனித மரியாவே…

முத : எங்கள் சம்மனசுக்களின் இராக்கினி ஆலயப் பங்குத்தந்தையர்களுக்காகவும், பங்கு மக்களுக்காகவும் உமது திருமகனிடம் என்றும் பரிந்துரை செய்யும் புனித மரியாவே…

முத : அசிசி நகரின் எளியவரும், செராஃபிக் தந்தையுமான புனித பிரான்சின் புனித மரியாவே…

முத : கிளர்ச்சியுற்று வீழ்ந்த வானதூதனான லூசிஃபரின் அரியணையை அவருக்கு வழங்கியப் புனித மரியாவே…

முத : வானகத் தூதரணிகள் புடை சூழ விண்ணகம் அடைந்த புனித மரியாவே…

முத : அரியணைகளின் இராக்கினியானப் புனித மரியாவே…

முத : ஆதிக்கங்களின் இராக்கினியானப் புனித மரியாவே…

முத : வானகத் தூதரணிகளுக்கு நீதிமன்றமாகத் திகழும் புனித மரியாவே…

முத : எண்ணற்ற செராஃபின்களால் என்றும் சூழப்பட்டுள்ளப் புனித மரியாவே…

முத : சம்மனசுக்களின் இராக்கினியானப் புனித மரியாவே…

முத : இறைவனின் தாயும் எங்களது தாயுமாகத் திகழும் புனித மரியாவே…

முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே…

எல் : எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்!

முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே…

எல் : எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்!

முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே…

எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்!

எல் : இறைவனின் தாயும், சம்மனசுக்களின் இராக்கினியுமான புனித மரியாவே, இதோ, உம்மிடம் சரணடைய ஓடி வந்துள்ளோம். எங்கள் அவசரங்களில் நாங்கள் வேண்டிக் கொள்ளும் போது நீர் பாரா முகமாய் இராதேயும். ஆசீர்வதிக்கப்பட்டவருமாய் விண்ணகத்துக்குரியவருமாயிருக்கிற கன்னியே, எல்லா ஆபத்துக்களிரிருந்தும் எங்களைப் பாதுகாத்தருளும். ஆமென்.

முத : இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்களாய் இருக்கும்படியாக…

எல் : சம்மனசுக்களின் இராக்கினியான புனித மரியாவே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

முத : மன்றாடுவோமாக…

இறைவா, ஆண்டுதோறும் எங்கள் சம்மனசுக்களின் இராக்கினியான புனித மரியாவின் திருவிழாவைச் சிறப்புடன் கொண்டாட அனுமதிக்கும் நீர், உமது மக்களின் செபங்களுக்குச் செவிசாய்த்து, இந்த ஆலயத்தினுள் வரும் அனைவருக்கும் உமது இரக்கத்தையும் அருட்கொடைகளையும் மனமுவந்து அளித்து, தங்களின் வேண்டுதல்கள் நிறைவேறிய மகிழ்ச்சியில் திளைக்க அருள்புரியும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

**********